செ.கு.எண்:121 4/9/07

<u>ஊரகத் தொழில் துறை அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி அறிக்கை</u>

சேலத்தில் உள்ள சேகோ சர்வ் நிறுவனம் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் மாவுகளை உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கி விற்பனை செய்யும் கூட்டுறவு நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் மூலம் விற்பனை செய்யப்படும் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் மாவுகள் உணவுப் பொருளாகவும் பயன்படுவதால் அவற்றை ஆலை உரிமையாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யும்பொழுது சில தரப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.

சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், தர்மபுரி ஆகிய மாவட்டங்களிலுள்ள ஜவ்வரிசி ஆலை உரிமையாளர்கள் சேகோ சர்வ் நிறுவனம் தரப் பரிசோதனை செய்வதில் கடைப்பிடித்திடும் விதிமுறைகளைத் தளர்த்துமாறு கோரி, 1.9.2007 முதல் தங்களுடைய ஆலைகளை மூடியுள்ளனர். இதன் காரணமாக முற்றிய நிலையில் உள்ள மரவள்ளிக் கிழங்குகளை எடுத்து விற்க முடியாத நிலைமை சில விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆலை உரிமையாளர்களும், விவசாயிகளும் இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர். உயர்நீதி மன்றத்தின் ஆணைப்படி, தர நிர்ணயம் செய்வதற்கான வழிமுறைகளை வகுத்திட 23.5.2007 அன்று வல்லுநர் கூட்டம் நடத்தப்பட்டு கூட்டத்தின் முடிவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் நீதிமன்ற முடிவுக்கு ஏற்ப விவசாயிகள் மற்றும் ஆலை உரிமையாளர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு அரசு தக்க முடிவுகளை மேற்கொள்ளும். எனவே ஆலைகளை உடனடியாகத் திறந்து உற்பத்தியைத் தொடங்குமாறு ஜவ்வரிசி ஆலை உரிமையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9